## 09 அன்று முற்பகல் நடைபெறவுள்ள சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்கான உத்தேச விவாதப் பொருட்கள் (AGENDA)

| | | |
|---|---|---|
| 1 | **அரசுத் துறை / நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட அலுவலரை நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலராக நியமித்தல்** **(பதில் அளிக்க வேண்டிய துறை:** பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் , சட்டமுறை எடையாளவு கட்டுப்பாட்டுத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தென்னக ரயில்வே) | மருந்து கட்டுப்பாட்டுத்துறை, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவ நீர் அகற்று வாரியம், பேரூராட்சி நிர்வாகம், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புத் துறை, சென்னை மாநகராட்சி, தொழிலாளர் துறை, மின்சார வாரியம், மாநகர போக்குவரத்து கழகம், ஜேஜு, ஹேஈடு, சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் ஆகிய துறைகள் / நிறுவனங்கள் நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவரை நியமனம் செய்து நியமன ஆணை அனுப்பி வைத்துள்ளனர். இதர துறை தலைவர்களிடமிருந்து நியமன ஆணை வரவில்லை. கூட்டத்தின் போது நேரில் அறிக்கை தர கேட்டுக் கொள்ளப்படுகிறது. |
| 2 | **உணவு பாதுகாப்பு மற்றும் இறக்குமதி செய்யும் உணவு பண்டங்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல்**<br><br>**பதில் அளிக்க வேண்டிய துறை:**<br>**1. பொது சுகாதாரம் மற்றும் நோய் கட்டுப்பாட்டுத் துறை**<br>**2. சட்டமுறை எடையளவ கட்டுப்பாட்டு துறை** | ❖ உணவு பொருட்கள் குறிப்பாக வெளிநாடு உணவு பொருட்கள் வாங்கும் பொதுமக்களுக்கான தற்காப்பு விவரம் அதாவது பொருட்கள் வாங்கும் போது நுகர்வோர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து பத்திரிக்கை செய்தியாக வெளியிட கேட்டுக் கொள்ளப்பட்டது.<br>❖ மேலும் வணிக சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தி அதில் விற்பனைக்கு பொருட்கள் வாங்கும் போது அவர்கள் உறுதிபடுத்தி கொள்ள வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து வணிக சங்கங்களை தொழில் சார்ந்து வகைகளாக பிரித்து தொழிலுக்கேற்றவாறு விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி வணிகர்களுக்கு பயிற்சி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. |
| 3 | **எரிவாயு இணைப்புகள் உபயோகம் மற்றும் விநியோகம்**<br>**பதில் அளிக்க வேண்டிய துறை:**<br>1. IOC<br>2. HPC<br>3. BPC | ❖ எண்ணெய் நிறுவன முகவர்கள் தன்னிடமே அடுப்பு வாங்க வேண்டும், என்றும், எரிவாயு இணைப்புடன் டீத்தூள் வாங்க வேண்டும் என வற்பறுத்துவது போன்ற புகார்கள் BPC நிறுவனம் எடுத்த நடவடிக்கை குறித்து தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகின்றது.<br>❖ அதிகமாக பணம் வசூலிக்கும் டெலிவரி பணியாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டு உள்ளது என தெரிவிக்கப்பட்டதை அடுத்து அதனை பத்திரிக்கை செய்தியாக வெளியிட்டால் தவறு செய்யும் மற்ற டெலிவரி பணியாளர்களும் திருந்த வாய்ப்பாக இருக்கும் என கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திகளை கூட்டத்தின் போது காண்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றது.<br>❖ டெலிவரி பணியாளர்களுக்கு முறையான பணி நியமனம், ஊதியம் நிர்ணயம் செய்வதன் மூலம் அதிகமாக பணம் வசூலிப்பதை முழுமையாக வாய்ப்ப உள்ளது என கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே டெலிவரி பணியாளர்களுக்கு முறையான பணி நியமனம், ஊதியம் நிர்ணயம் செய்திட எண்ணெய் நிறுவனங்கள் மேற்கொண்ட நடவடிக்கை விபரத்தை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றது.<br>❖ எரிவாயு உருளை விற்பனை பில் தேதியும் டெலிவரி தேதியும் ஒரு வார காலம் வரை வித்தியாசம் உள்ளது, இதனால் டெலிவரி பணியாளர்கள் தவறு செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. பில் தேதியில் டெலிவரி செய்வதில் நடைமுறை சிரமங்கள் இருப்பதாக தெரிவித்த எண்ணெய் நிறுவனங்கள் கால வித்தியாசத்தை 2 நாட்களாக குறைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தனர். இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் தெரிவிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 4 | **பொது விநியோக திட்ட செயல்பாடுகள் குறித்த புகார்கள்**<br>**பதில் அளிக்க வேண்டிய துறை:**<br>**துணை ஆணையர் (உபொ) மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், சென்னை (நகரம்) தெற்கு** | புகாருக்கு இலக்கான சேப்பாக்கம் வளாகத்தில் இயங்கி வரும் நியாயவிலை கடையினை 100% தணிக்கைக்கு உட்படுத்த சென்ற கூட்டத்தில் ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டது. இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. |
| 5 | **சென்னையில் உள்ள சிறிய உணவகங்களில் மற்றும் தேநீர் கடைகளில் உணவு பரிமாற தரமற்ற பிளாஸ்டிக் கோப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன.**<br><br>**பதில் அளிக்க வேண்டிய துறை:**<br>**சென்னை மாநகராட்சி** | ❖ தெருவோர கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு சுகாதாரமானதாக விற்பனை செய்ய தெருவோரக் கடை விற்பனையாளர்களுக்கு ஒரு பயிற்சி நடத்தி அதில் சுகாதாரமான உணவு தயாரிப்பது பற்றியும் எவ்வாறு சுகாதாரம் கெடாமல் விற்பனை செய்ய வேண்டும் என்பது குறித்தும் ஒரு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.<br>❖ தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் தெருவோர உணவ விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்க தயாராக உள்ளதால் அவர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறும், சென்னை நகரில் நுகர்வோர் மன்றம் நிறுவப்பட்டுள்ள கல்லூரி மாணவர்களும் தெருவோர உணவ விற்பனையாளர்களுக்கு உதவ ஆர்வம் காட்டுவதால் அவர்களையும் கூட்டத்திற்கு அழைத்து பயிற்சி அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் கூட்டத்தில் தெரிவக்க வேண்டும். |
| 6 | **நகராட்சி நிர்வாகம் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டங்களை நடத்தாதது** | ❖ நகராட்சி நிர்வாக ஆணையர் நடத்திடும் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில், இரு மாதங்களுக்கொருமுறை நகராட்சி ஆணையர்கள் நடத்தும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் என்கிற பொருளை ஆய்வில் ஒரு பொருளாக சேர்த்துக் கொண்டு இக்குறைபாடு எளிதில் களையப்படும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.<br>❖ அனைத்து நகராட்சிகளிலும் இக்கூட்டம் முறையாக நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி கடிதம் அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது.<br>❖ 149 நகராட்சிகளில் எத்தனை நகராட்சிகளில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டம் நடத்தப்பட்டது என்ற விவரத்தினை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. |
| 7 | **புறநகர் பகுதிகளில் உள்ள டீ கடைகளில் கலப்பட தேயிலை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்ட புகார்**<br>**பதில் அளிக்க வேண்டிய துறை**<br>**நகராட்சி ஆணையர், அம்பத்தூர்** | அம்பத்தூர் நகராட்சியில் 20 டீ கடைக்காரர்கள் கலப்பட தேயிலை பயன்படுத்தியுள்ளதை கண்டுபிடித்தும் கூட அவர்களை எச்சரித்து விடப்பட்டுள்ளனர். தவறு என கண்டறிந்த பின்னரும் தண்டனை வழங்காமல் இருந்தால் தவறுகள் குறைய வாய்ப்பில்லை. எனவே உடனடியாக குற்றவியல் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் கூட்டத்தில் தெரிவக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 8 | **ரயில்வே துறையின் சேவைகள் குறித்து எழுப்பப்பட்ட புகார்கள்** | 17/10/2008 & 23 / 01 / 2009 ஆகிய கூட்டங்களில் ரயில்வே துறையின் அலுவலர்கள் எவரும் கலந்து கொள்ளாததால் அக்கூட்டத்தில் நுகர்வோர் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.<br>❖ சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையத்தில் 2 கட்டண கழிப்பிடம் மட்டுமே உள்ளது. கூடுதல் கழிப்பிட வசதி செய்து தர கோரப்பட்டது.<br>❖ பார்க் முதல் வேளச்சேரி வரையிலான ரயில் நிலையங்களில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லை. பயணச்சீட்டு கவுண்டர் தவிர வேறு எதுவும் இல்லை.<br>❖ சென்ட்ரல் முதல் அரக்கோணம் வரையிலான ரயில் நிலையங்களில் கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்களின் உபயோகத்திற்கு இன்னும் திறக்கப்படவில்லை.<br>❖ ரயில்வே நிலையங்களிலுள்ள இரு சக்கர வாகனங்களை நிறுத்துமிடங்களில் அதற்கான கட்டணத் தொகை தன்னிச்சையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனை முறைப்படுத்த வேண்டும். எவ்வளவ கட்டணம் செலுத்த வேண்டும் என்பது குறித்த விவரத்தினை அறிவிப்ப பலகையில் காட்சிபடுத்த ஆவன செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.<br>❖ பெங்களூரு (ம) திருப்பதி ரயில்களில் முன்பதிவு பெட்டிகளில் பதிவ செய்யாத பயணிகளும் ஏறுகின்றனர். இதனை களைய நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மேலும் இந்த ரயில் பெட்டிகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை |
| 9 | **போக்குவரத்துத் துறை**<br>**பதில் அளிக்க வேண்டிய துறை**<br>**பொது மேலாளர், அரசு போக்குவரத்து கழகம், காஞ்சிபுரம்** | அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர் புகைபிடித்துக் கொண்டே வண்டி ஓட்டுவதாக தெரிவிக்கப்பட்ட புகார் இவ்வலுவலக நுவி1/45892/08, டநாள்:30/12/08ல் அனுப்பப்பட்டுள்ளது. இதன் மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரம் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. |
| 10 | **சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு துறை** | கோயம்பேடு பேருந்து வளாகத்தில் பொருட்கள் விலை அதிகமாக விற்கப்படுவதாக பெறப்படுகின்ற புகார்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கூட்டத்தின் போது தெரிவிக்க எடையளவ கட்டுப்பாட்டுத் துறையும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. |
| 11 | **இதர பொருட்கள்** | கூட்டத்தின் போது தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளால் எழுப்பப்படும் பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். |

ஒம்/- க. ராஜாராமன்,

ஆணையாளர்